உ

ஸ்ரீவாணீ சகாயம்.

கலைமகள்.

புதுவைக் கலைமகள் கழகத்தினின்றும் வெளிவரும்

மாதப் பத்திரிகை.

வித்தைவிரும்பு. கேள்விமுயல். வீடுபேறுநில்.

வெண்டாமரை ௬. } 1918-ம் ஆ ஆகஸ்ட் மீ } இதழ் ௮.

திருக்குறள் வியாசம்.

௧௧-ம் அதிகாரம்.

செய்ந்நன்றியறிதல்.

உள்ளுறை:— (1) செய்ந்நன்றி யறிதலென்பது. (2) காரணமின்றிச் செய்ததும், காலத்தினாற் செய்ததும், பயனை யாராயாமற் செய்ததும் அளவில்லாதனவையாதல். (3) செய்யாமற் செய்தல் முதலிய மூன்று மல்லாத உதவியும் அறிவார்க்குச் செய்தவிடத்துப் பெரிதாதல். (4) நன்றி செய்தவரது நட்பை விடலாகாது. (5) நன்மையும் தீமையும் ஒருவனால் செய்யப்பட்டவிடத்து அவ்விரண்டில் மறப்பதும் மறவாததும். (6) நன்றல்லதை அன்றே மறக்கும் விதம். (7) செய்ந்நன்றி மறத்தலின் கொடுமை. (8) முடிவுரை.

விளக்கம்.

செய்ந்நன்றி யறிதலாவது தனக்குப் பிறர் செய்த நன்றியை மறவாதிருத்தல். உலகில் மக்களாகப் பிறந்த ஒவ்வொருவரும் இதனைப் பொன்னேபோற் போற்றி யொழுகல்வேண்டும். இஃதில்லையேல் விலங்குகட்கும் மக்கட்கும் வேற்றுமையில்லை.

ஒருவன் பிறருதவியை வேண்டாது செய்த உதவிக்கு எதைக்கொடுத்தால் ஈடாகும்? மண்ணுலகம் ஈடாகுமா? வானுலகம் ஈடாகுமா? *‘தனக்கு முன் ஒருதவியும் செய்யாதிருக்க ஒருவன் பிறனுக்குச் செய்த உதவிக்கு, மண்ணுலகும் விண்ணுலகும் கைம்மாறாகக் கொடுத்தாலும் ஒத்தல் அரிது.’ ஏன்? கைம்மாறுகள் (பிரதியுபகாரங்கள்) எல்லாம் காரணமுடையன வாதலின், காரணமில்லாத உதவிக்கு அவை போதாமையின் என்க. அன்றியும், காலத்திற் செய்த நன்றியின் பெருமையோ கழறுதற்கரிது. †‘ஒருவனுக்கு முடிவு வந்த அளவில் ஒருவன் செய்த உபகாரம், தன்னை நோக்கச் சிறிதாயிருந்ததாயினும் அக்காலத்தை நோக்க, நிலவுலகத்தினும் மிகப் பெரிதாயிருக்கும்.’ அக்காலத்தை நோக்கவேண்டுமேயன்றிப் பொருளின் சிறுமையை நோக்கலாகாதன்றோ. மேலும் பின்வரும் பயனைக் கருதாமல் செய்த உதவி உலகில் மிகப் பெரிதாகும். ‡‘இவர்க்கு இது செய்தால் இன்னது பயக்குமென்று ஆராய்தலிலராய்ச் செய்த உதவியாகிய ஈரமுடைமையை ஆராயின் அதன் நன்மை கடலினும் பெரிதாம்.’ இவற்றால் செய்யாமற் செய்ததும், ஆபத்து வேளையிற் செய்ததும், பயனை ஆராயாமற் செய்ததும் அளவில்லாதன என்பது இனிது பெறப்பட்டது.

இனி, செய்யாமற் செய்வது முதலிய மூன்றுமல்லாத உதவியைப் பற்றியும் சிறிது ஆராய்வோம். செய்ந்நன்றி சிறிதாயினும் அதனைப் பெரிதாகக் கொள்வது பெரியோர்க்கு இயல்பு. ஆதலின், §‘தமக்குத் தினையளவினதாகிய உபகாரத்தை ஒருவன் செய்தானாயினும் அதனை அவ்வளவாக நினையாமல் பனையளவின

---

* செய்யாமற் செய்த வுதவிக்கு வையகமும்
வானகமு மாற்ற லரிது

† காலத்தி னாற்செய்த நன்றி சிறிதெனினு
ஞாலத்தின் மாணப் பெரிது.

‡ பயன்றூக்கார் செய்த வுதவி நயன்றூக்கி
னன்மை கடலிற் பெரிது.

§ தினைத்துணை நன்றி செயினும் பனைத்துணையாக்
கொள்வர் பயன்றெரி வார்.

தாகக் கருதுவர் அக்கருத்தின் பயனை யறிபவர்.' ஏன்? அங்ஙனம் கருதுவார்க்கு வரும் பயன் பெரிதன்றோ? அன்றியும் உதவிக்கு ஓரளவுண்டோ? இல்லை. *'எதிர் செய்யும் உதவியானது, காரணமும் பொருளும் காலமுமாகிய மூவகையாலும் முன்செய்த உதவி யளவின தன்று; அதனைச் செய்வித்துக்கொண்டவரது தகுதி யளவினதாகும்.' சால்பு (குணநிறைவு) எவ்வளவு பெரிதாயிற்றோ உதவியும் அவ்வளவு பெரிதாமென்க. ஆதலின் செய்யாமற் செய்வது முதலிய மூன்று மல்லாத உதவியும் அறிவார்க்குச் செய்தவிடத்துப் பெரிதாமென்பது நன்கு விளங்கும்.

இத்தகைய நன்றி செய்த பெரியோரது நட்பை நாம் கைவிடலாமா? அவர் நட்பு நமக்கு இம்மைக்கும் நன்மை தருகின்றது. மறுமைக்கும் உறுதி தருகின்றது. ஆனது பற்றியே †'துன்பக் காலத்தில் தனக்கு உதவியானவரது நட்பை விடாதிருக்கக்கடவர்; அறிவொழுக்கங்களில் குற்றமற்றவரது உறவாந் தன்மையை மறவாதிருக்கக்கடவர்' என்று ஆன்றோர் அறைந்தனர். இன்னும் அப்பெரியார், தமக்கு நன்றி செய்தவர்களை ஒருநாளும் மறக்கமாட்டார்கள். ‡'தம்மிடத்துண்டாகிய துன்பத்தை நீக்கினவரது நட்பை வினைப்பயன் தொடரும் எழுமையினையுடைய தம் எழுவகைப் பிறப்பினும் நினைப்பர்.' துன்பந் துடைத்தலால் அவரிடத்துண்டாகிய அன்பு. பிறப்புதோறும் தொடர்ந்து அன்புடையாராவர். ஆதலின் நன்றி செய்தவரது நட்பை நாம் ஒருபோதும் கைவிடலாகாது.

நிற்க, நமக்கு முன் நன்றிசெய்த ஒருவனே தீமையையும் செய்தானென்று வைத்துக்கொள்வோம். அப்போது அவன் செய்த நன்றியை மறந்துவிடலாமா? தீமைக்கு என்னசெய்வது?

---

* உதவி வரைத்தன் றுதவி யுதவி
செயப்பட்டார் சால்பின் வரைத்து.

† மறவற்க மாசற்றார் கேண்மை துறவற்க
துன்பத்துட் டுப்பாயார் நட்பு.

‡ எழுமை யெழுபிறப்பு முள்ளுவர் தங்கண்
விழுமந் துடைத்தவர் நட்பு.

என்றால், *‘ஒருவன் முன் செய்த நன்மையை மறந்துவிடுவது ஒருவனுக்கு அறமல்ல; அவன் செய்த தீமையை செய்த பொழுதே மறந்துவிடுவது அறமாம்’ என்று பெரியோர் கூறுவராதலின், தீமையை மறந்து நன்றியை மறவாதிருத்தலே நாம் செய்யத்தக்கதாகும்.

ஒருவர் செய்த தீமையை எப்படி மறத்தல்கூடும் எனச் சிலர் நினைக்கலாம். அதனை மறக்குந் திறம் பெரியோர் கூறியுள்ளனர். †‘தமக்கு முன்னொரு நன்மை செய்தவர், பின் கொன்றாலொத்த தீமைகளைச் செய்தாராயினும், அவர் செய்த நன்மை யொன்றனையும் நினைக்க, அவையெல்லாம் இல்லையாம்.’ தினையளவு பனையளவாக் கொள்ளப்படுதலினாலே அந்நன்றி ஒன்றுமே அத்தீமைகளையெல்லாம் கெடுக்குமன்றோ.

செய்ந்நன்றி மறத்தலின் கொடுமை மிகப்பெரிது. ‡‘பெரிய அறங்களைச் சிதைத்தவர்க்கும் பாவத்தின் நீங்கும் வழியுண்டாம்; ஒருவன் செய்த நன்றியைச் சிதைத்த மனிதனுக்கு அப்பாவத்தினீங்கும் வழி யில்லை.’ ஆன்முலை யறுத்தல், மகளிர் கருவைச் சிதைத்தல் முதலிய பாதகங்களைச் செய்தவர்க்கும் கழுவாய் (பிராயச்சித்தம்) உண்டு, செய்ந்நன்றி மறந்தவர்க்குக் கழுவாய் இல்லை யென்று சொல்லப்படுமானால் அதன் கொடுமையை நாம் என்னென்றெடுத்து நவில்வது!

இத்துணையுங் கூறியவாற்றால், ஒருவன் காரணமின்றிச் செய்த உதவிக்கு எதுவும் ஈடாகாதென்பதும், காலத்திற் செய்த உதவி சிறிதாயினும் மிகப்பெரிதென்பதும், கைம்மாறு கருதாமற் செய்த உதவி கடலினும் பெரிதென்பதும், சிறிய நன்றியையும் பெரியதோர் நன்றியாகக்கொள்வர் பெரியோரென்பதும், உதவி

---

* நன்றி மறப்பது நன்றன்று நன்றல்ல
தன்றே மறப்பது நன்று.

† கொன்றன்ன இன்னா செயினு மவர்செய்த
வொன்றுநன் றுள்ளக் கெடும்.

‡ எந்நன்றி கொன்றார்க்கு முய்வுண்டா முய்வில்லை
செய்ந்நன்றி கொன்ற மகற்கு.

செய்யப் பெற்றவராது தருகியளவே அவ்வுதவியின் அளவென்பதும், நன்றிசெய்தவரது நட்பை விடலாகாதென்பதும், துன்பந் துடைத்தவர் நட்பை நல்லோர் எழுபிறப்பினும் நினைப்பரென்பதும், பிறர் செய்த நன்றியை மறவாமல் தீமையை மட்டும் மறத்தல்வேண்டுமென்பதும், ஒருவர் செய்த நன்றியை நினைக்க அவர் செய்த தீமையெல்லாம் கெடுமென்பதும், செய்ந்நன்றி மறந்தவர்க்கு ஈடேறும் வழியே யில்லை யென்பதும், பிறவும் பெறப்பட்டன.

மருத்துவப் பெட்டி.

(தேசபக்தன்)

புதிய ஜுரத்துக்கு ஓர் அருமருந்து.

ஆயுள்வேத முறையில் நெடுநாள் அனுபவமுள்ள லால்குடி முகம்மத் சுலைமான் சாஹிப் அவர்கள் நமக்குப் பின்வருமாறு எழுதுகின்றனர்.

ஜுரக்குறிகள் கண்டிருப்பவர்களும், ஜுரத்தைத் தடுக்க விரும்புவோரும் கீழ்க்கண்ட சாமான்களும் மூலிகைகளும் சேர்ந்த கஷாயத்தைக் குறிப்பிட்டவாறு உட்கொண்டால் சௌக்கியமடைவார்கள்.

தாளிச்சபத்திரி காசு 2, சுக்கு காசு 1, பற்பாடகம் காசு 1, நிலவேம்பு காசு 2, பேப்புடல் காசு 2, நொச்சியிலை ஒரு பிடி, கண்டங்கத்தரி சமூலம் ஒரு பிடி, விஷ்ணுக்கிராந்தி ஒரு பிடி.

இவைகளை எடுத்து உரலிலிட்டு நன்றாய் இடித்து முக்கால்படி தண்ணீரில் போட்டுக் கால்படியாகக் காய்ச்சி, காலை மாலை இரண்டுவேளை சாப்பிடவும். மேற்கண்ட தினுசுகள் இரண்டுவேளைக் கஷாயத்துக்குப் போதுமானது. தலைப் பாரமும் சுரமும் பித்தமும் அதிகமாகவிருந்தால் மேற்கண்ட சாமான்களை மூன்று தரம் வாங்கி மூன்று நாள் கஷாயம் வைத்து ஆறுவேளை சாப்பிடலாம்.

பத்தியம்:—புளி, மோர் நீக்கவும். தண்ணீரை விலக்கி வெந்நீரை உபயோகிக்கவும். கஷாயத்தில் பத்துத்துளி தேன் விட்டுச் சாப்பிடவும்.

எலிகடிக்கு மருந்து.

ஆகாசகருடன் கிழங்கு ஒரு வராகனெடையை வெள்ளாட்டுப் பாலில் மெல்லிதாக அரைத்து மூன்றுநாள் உள்ளுக்குக் கொடுத்து உப்பில்லாப் பத்தியம் பிடித்தால் தீரச் சொஸ்தமாகும்.

பாம்பு, விஷ நாய்க்கடி, தேள்கொட்டு முதலிய சகல விஷங்களையும் நிர்மூலமாக்கக்கூடிய சஞ்சீவிக் கோப்பான ஔஷத முறை.

கலைமான் கொம்பைக் கொண்டுவந்து விரல் நீளமும், விரல் கனமும் இருக்கும்படி துண்டு துண்டாய் நறுக்கி 5 அவுன்ஸ் நிறுத்துக் கொண்டு 4 படி ஜலம் கொள்ளத்தக்கதாய் அகன்ற ஒரு புதிய மட்பாண்டத்தில் அரைவாசி ஆற்று மணலைக் கொட்டி ஷை மான்கொம்புத் துண்டுகளை அந்த மணலுக்கு நடுவில் வைத்து, பானைக்குள் முக்கால் வாசி ஜலம் ஊற்றி, பிறகு கருவேலம்பட்டை 1 அவுன்ஸ், அன்னபேதி 2 திராம் ஆகிய இவைகளை நன்றாய் இடித்து அந்தப்பானையிற் போட்டு அடுப்பில்வைத்து எரித்து, நீர்வற்றி ஷை மான்கொம்புத் துண்டுகள் கறுப்பாகும் வரையில் ஒரு கரண்டியினால் கிளறிக்கொண்டே இருக்கவேண்டும். ஷை மான்கொம்புத் துண்டுகள் கறுப்பானவுடனே பானையைக் கீழே இறக்கி, ஆறியபின்பு, ஷை கொம்புகளை யெடுத்து ஒருதுண்டோடு மற்றொரு துண்டை நன்றாய்த் தேய்க்கவேண்டும். அந்தத் துண்டுகள் யாவும் மிருதுவாய்ப் பளபளப்பு (பாலீஷ்) ஆகும் வரையில் தேய்த்து, முலைப்பால் அல்லது சீமைத் திராக்ஷரசக் காடியில் அரை மணி நேரம அவைகளை முழுகவைத்துப் பிறகெடுத்துப் பத்திரப்படுத்திக் கொள்ளவும்.

விஷந் தீண்டின வுடனே, கடிவாயில் இந்த மான்கொம்புத் துண்டுகளில் ஒன்றை வைத்தால் உடனே அதை மான்கொம்புத்துண்டு பிடித்துக்கொண்டு விஷம் முழுவதும் உறிஞ்சிய பிறகு விட்டுவிடும். அதன்பின் அக்கொம்பை யெடுத்து முன்போலவே முலைப்பாலில் அல்லது காடியில் அரைமணி நேரம் முழுகவைத்தால் அவ்விஷத்தை நீக்கிவிடும். சிலந்திக் கட்டிகளிலுள்ள சீழ், துர்நீர் முதலியவைகளை யெடுப்பதற்கு, கட்டி பழுத்த பிறகு கொஞ்சம் கீறிவிட்டு, இந்தக் கொம்புத் துண்டை வைத்தால் அச்சீழ், துர்நீர் முதலியவற்றை உறிஞ்சிவிடும். அதன்பின் முன்போல் முலைப்பாலில் ஊறவைத்துச் சீழ் அல்லது துர்நீரைக் கக்க வைக்கவேண்டும். இந்தக் கொம்பைத தண்ணீர் வார்த்து இழைத்து உள்ளுக்குக் கொடுத்தால் காக்கைவலி, குதிரைவலி முதலிய சகல வலிகளையும் நிர்மூலமாக்குவதோடு வயிற்றிலுள்ள பூச்சி புழுக்களைப் போக்கி, தலை நோயையும் சௌக்கியமாக்கும். இது மிகவும் சுலபமான பாகமானதால் யாவரும் செய்து பரீக்ஷித்துப் பார்க்கலாம்.

ஆர். எம். குமாரதேவ முதலியார்.

புதிய ஜுரத்தைத் தடுக்க வீட்டில் போடவேண்டிய தூபம்.

மயிலிறகு, வேப்பந்தழை, முள்ளிப்பழம், மிளகு, பெருங்காயம், ஜடாமாஞ்சி, பருத்திக்கொட்டை, வெள்ளாட்டு மயிர், பாம்புச் சட்டை, பூனைவிட்டை, யானைத்தந்தம்.

இவைகளைச் சமனெடை சேர்த்து இடித்து நெய்கலந்து தினந்தோறும் வீடுகளில் தூபம் போடவும். இதனால் அந்த வீடுகளில் புதிய ஜுரம் அணுகாமல் நீங்கும்.

கிடைக்காத வஸ்துக்களை நீக்கிக் கிடைத்த வஸ்துக்களைக்கொண்டு தூபம் போடவும்.

K. தியாகராஜ சாஸ்திரி.
ஆயுர்வேத டாக்டர், திருச்சி.

வௌவால் தைலம்.

வௌவால் என்னும் பறவையின் இரத்தத்தையும், கொழுப்பையும் நல்லெண்ணெயிற் காய்ச்சித் தைலமாக்கித் தலையில் தடவிவந்தால் நரை மயிர் கறுக்குமாம். வழுக்குத் தலையிலும் மயிர் முளைக்குமாம். கண் குளிர்ந்திருக்குமாம்.

(லோகோபகாரி.)

வைராக்கியப் பிரகரணம்.

(விவேக மானச சம்வாதம்.)

சண்முகனை எக்காலுஞ் சார்ந்திடுதி நெஞ்சமே
தண்மைத் தமிழ்வாற்குத் தான்.

ஓர்காளிரவில் விவேகன், மானசன் என்னும் நண்பர் இருவர், தம் உப்பரிகையின்மீது உவப்புடன் இருந்தனர். அப்போழ்தோ சந்திரன் பிரகாசித்தனன். இளந் தென்றலோ இணையில் உவகையை யூட்டியது. அத்தருணம் ஓரிடத்தினில்லாது பல் விடயங்களிற் செல்லுந் தன்மை யுடையனாயினன் மானசன். இதைக் கண்ட விவேகன், "நகுதற்பொருட்டன்று நட்டல் மிகுதிக்கண் மேற்சென் றிடித்தற் பொருட்டு" என்ற

தெய்வ மொழிக்கிணங்க, தன்னண்பனை விடயங்களிற் செல்லு நிலைமை யினின்று நீக்கித் தன் வசமாக்குதற் பொருட்டுப் புகழ்ந்து கூறுகின்றான்.

விவேகன்.—அன்ப! நீ நீடூழி வாழ்க.

மானசன்.—நண்ப! இதென்ன இறும்பூது! பல் காலமாகப் பாலும் நீரும் போலும், உடலு முயிரும் போலும் நாம் ஒற்றித் திருக்க, தற்போது என்னை வேறு பிரித்துப் புகழ்ந்தது எற்றுக்கோ?

விவேகன்—அன்ப! நீ ஓரிமைப் போழ்தும் ஓரிடத்தினில்லாது பல்விடயங்களிற் செல்லா நின்றனை. அவ்வாற்றானே செல்லாது இவ்வோர் கூற்றைக் கூறிப் போதற்கேயாம்.

மானசன்.—நண்ப! நல்லது நான் கூறவேண்டுவது யாது? அதைக் கூறுவீராக.

விவேகன்.—அன்ப! கூறுவல், சற்று அவதானமாகக் கேள். சென்ற சென்மங்களிற் செய்த தவப் பயனன்றோ இம் மாநுடதேகம் அடைந்தது. அடைந்தும் இறைவன் திருவடி எய்தற்குரிய ஏது ஒன்றும் புரியாது கமரிற் கவிழ்த்த அமுதம் போல வாணாளை வீணாளாக வாளா கழிக்கின்றனை, இது உசிதமன்றன்றே?

மானசன்.—நண்ப! நீர் கூறியாங்கு இத்தேகம் எய்தியது தவப் பயனே. இத் தேகம் பெற்ற நாம் இனி இறைவன் திருவடியை எய்தா திருப்பமோ? இன்னும் சிலதினங்கள் கழிந்த பின்னர் எய்துவம்; இத னிமித்தம் இவ்வளவு விரைவு செய்ததென்னை?

விவேகன்.—அன்ப! இம்மெய் பல்லூழி காலம் பண்புற இருக்குந் தகையதோ? இல்லை. இதற்குறுதி கூறிய நூற்றாண்டுகளுள் இடை இடையே கணந்தோறும் நிலையாமை யிருத்தலின், "நெருந லுளனொருவன் இன்றில்லை யென்னும் பெருமை யுடைத்திவ் வுலகு" என்னும் பொய்யாமொழிக் கிணங்க எக்கணத் தழிவதோ அறியும் அவதி அன்று அன்று. ஆகலின் இப்போழ்தே முயற்றுதல் வேண்டும்.

மானசன்.—நண்ப! இச்சரீரம் அநித்தியமாயின் இதை யொழித்து இனி வருங் காயத்து இறைவன் திருவடி அடைவமே. இப்போழ்தே எய்தவேண்டுமென்ப தென்னை?

விவேகன்.—அன்ப! பின்வருங் காயத்து எய்தலா மென்பது கொள்ளுந் தகுதியதே ஆயினும், இச்சரீரம் எய்தற்கரிய தென்பதை,

"அரிதாம் பிறப்பு ளுயர்மா னிடத்தி னடைவுற்று வைக விதனி
னரிதாகு நல்ல குலனிற் பிறத்த லறிவாள ராத லதனி
னரிதாகும் வேத முதலாய்ந்து முக்க ணமலற் கலத்த லதனி
னரிதா முயர்ந்த குலனுற்றும் வீணி லழிவாரி தென்கொலறிவே.
(தணிகைப்புராணம்)

என ஆன்றோரும் அருளினர் ஆகலின் இப்போழ்தே இறைவன் றிருவடி அடைய வேண்டுமென்றது அவசியமே அன்றோ?

மானசன்.—நண்ப! ஆராய்ந்து பார்க்குமளவில் நீர் கூறியது யாவு முண்மையென அறிந்தேன்.

விவேகன்.—அன்ப! யான் கூறும் கூற்று முழுதும் உண்மை யென்றறிந்தனை யாயின் இக்காயம் இருக்கும் போழ்தே இறைவனது இரண்டு திருவடிகளையும் தொழுது எழுவகைப் பிறவியினையும் நீக்கிக் கொள்வதில் நின் கருத்தென்னை?

மானசன்.—நண்ப! நீர் கூறியாங்கு, பிறவி நீக்கத்தில் எனக்கும் திருப்தியே.

விவேகன்.—அன்ப! திருப்தி யாயின், யான் இன்னும் இயம்பு வதைக் கவனமுடன் கேட்குதி.

மானசன்.—நண்ப! அவ்வாறே கேட்டுவருவல்.

விவேகன்.—நீ, அடைந்த அவ்வளவினே பக்குவமும் பாராது எழுதிறப் பிறவியையும் போக்கும் ஆசாரிய மூர்த்திகளது திருவடித் தாமரைகளை அன்புடனடுத்துக் குற்றேவலைக்குறைவிலாதுசெய்து பெறு தற்கரிய பேரின்ப வீட்டை யடைந்தாயில்லை. இது மட்டுமோ, மகன் மனை ஆதிய குடும்பத்தவரைக் கூடி வரைதற்கரிய வருத்தத்தையும் விளைந்து கொண்டனை. அன்றி இன்றோ நாளையோ இயமன் இங்கு வருவன். வருங்காலை அவன் உன்பா லிரங்குவனோ! துன்பங் கண்டு தூரத்தகல்வனோ! செல்வங்கண்டு சோர்திருப்பனோ! இல்லை இல்லை. ஈர மில்லாது கொண்டுபோவன். போம்பொழுது நின் சுற்றத்தினர் சூழ்ந்து தடுக்கும் தகுதியுடைய ராவரோ சொல்லுதி?

மானசன்.—நண்ப! நீர் கூறியது யாவும் மெய்ம்மை. திருவடியே திற முற்ற துணை. சீவர்கள் சிறிதும் துணை அல்லர். ஆயினும் குடும் பத்தவரைவிட்டால் அவர்கள் குறைவிலாது காப்பாற்ற வல்லுவ ரின்மை யாற் றுன்புறுவர். அது பற்றியே அவர்களோடுங் கூடி யிருந்தேன்.

விவேகன்.—அன்ப! நன்று நன்று! மனைவி யாதியரைக் காக்குங் கருத்தன் நீதான் போலும்!

மானசன்.—நண்ப! அதிலென்ன சந்தேகம்! யானே காப்பாற்று கின்றேன்.

விவேகன்.— அன்ப! காப்பது உன்றொழி லாயின் உன்னை இயமன் கொண்டுபோங் காலத்து மீண்டு வந்து எக்காலுங் காப்பாற்ற வல்லையா? அல்லது ஓரிமைப்பொழுதேனும் வந்து சுற்றத்தினரைச் சுக முற்றிருக்கிறீர்களா வென வினவ வல்லையா? உரைத்திடுதி.

மானசன்.—நண்ப! அவ்விரு காரியமும் அமையாததே ஆயினும் இங்கிருக்கு மளவுங் காப்பாற்றுவல்.

விவேகன்.—சரி சரி, ஈண்டுள்ளளவுங் காப்பாற்ற வல்லையாயின் உன் சுற்றத்தினரைக் கொற்றவன் முதலியோர் கொண்டு போமிடத்துக் காக்க வல்லையோ? கழறுதி.

மானசன்.—நண்ப! நீர் கூறிய வாற்றால் இங்குள்ளளவும் காக்க இயலாமை அறிந்தேன், பின் அவர்களைக் காக்க வல்லவர் யாவர்? கருணை கொண்டு மொழிந்திடுக.

விவேகன்—அன்ப! உண்மையாக நோக்குமிடத்துச் சீவர்களுக்குச் சிவனே துணை. அன்றிச் சீவர்களுக்குச் சீவர்களே துணையாத லில்லை.

(இன்னும் வரும்)

ச. ஸ்வீ. சிவஸ்வாமி தேசிகர்,
காஞ்சிபுரம்.

கபிலரும், வேள் பாரியும்.

கபிலர் சரிதையில் முக்கியமாக நாம் காணக் கிடப்பது; அவர் நட்பு வன்மையும், அறனிலாளர் முன் காட்டும் அஞ்சா நெஞ்சமும், அவரது அறமாதிய விடயங்களில் மிகுந்துள்ள ஆர்வமுமே. பின் தோன்றிய சில புலவர்களைப் பற்றிச் சாதாரணமாகச் சொல்லப்படுகின்ற

"போற்றினும் போற்றுவர் பொருள்கொ டாவிடிற்
றூற்றினுந் தூற்றுவர் சொன்ன சொற்களை
மாற்றினு மாற்றுவர் வன்க ணாளர்கள்
கூற்றினும் பாவலர் கொடிய ராவரே!"

என்ற பாட்டு இவருக்கும், இவர் போன்ற, சங்கப் புலவரது விரிந்து கிடக்கும் தொகை நூற்களிற் காணப் படும் புலவர்களுள் ஒருவருக்கும்

ஒவ்வாது. இப் புலவர்கள் தாம் அடுத்து நின்ற வள்ளல்களைப் பரிந்து பரிந்து பாடினராயினும், அவன் மன்னன் தான் புலவன், அவன் கொடுப்போன் தான் கொண்டு வாழ்வோன், அவனைப் போற்றியே தீர வேண்டும் என்ற இழிந்த எண்ணங்கள் இல்லாது, சிறந்த நட்புரிமை பூண்டு, உயர் குணங்களைப் பாராட்டியும், இழி குணங்களைக் கண்டக்கால் இடித்துக் கூறியும், அவனுக்குற்ற சுக துக்கங்களை ஒருங்கனுபவித்தும், எவ்விதத்தும் அவன் நன்மையையே நாடி நின்றனர். இவை யாவும் கபிலரது சரிதையைப் பயில்வார்க்கு இனிது விளங்கும். நிற்க.

இவர் தம் நண்பன் பாரியின் கொடையை நன்கு சிறப்பித்துப் பாடியிருக்கிறார். "தாம் மனத்து நினைந்ததையே திடத்துடன் பாடும் கொள்கையை யுடையவர் இவர்" என்பதை இவரே,

"... .... அளிக்கென
விரக்கு வாரே னெஞ்சிக் கூறேன்"
(பதிற்றுப் பத்து, சுக.)

எனக் குறிப்பித்திருக்கிறார். ஆக, இவர் பாடல்களையே இங்கு ஆதார மாகக் கொண்டு நாம் நம் ஆராய்ச்சியைத் தொடங்குவோம்.

அவர் இங்கு ஒரு விறலியைப் பாரிபால் ஆற்றுப்படுத்துந் துறையிற் பாடுகின்றார்:

"சேயிழை பெறுகுவை வாணுதல் விறலி!
தடவுவாய்க் கலித்த மாயிதழ்க் குவளை
வண்டுபடு புதுமலர்த் தண்சிதர் கலாவப்
பெய்யினும் பெய்யா தாயினு மருவி
கொள்ளுழு வியன்புலத் துழைகா லாக
மால்புடை நெடுவரைக் கோடுதோ றிழிதரு
நீரினு மினிய சாயற்
பாரி வேள்பாற் பாடினை செலினே!"
(புறம். க0டு.)

"ஒளி வீசும் நெற்றியை யுடைய விறலி! சிவந்த அணிகளைப் பெறுகுவை, விசாலமான சுனையில் தழைத்துள்ள கரிய இதழ்களை யுடைய குவளையின் வண்டு மொய்த்துக் கிடக்கும் புதிய மலரின்கண் குளிர்ந்த மழைத்துளி கலக்குமாறு, மழை பெய்யினும் பெய்யாது போயினும், கொள்ளிற்காக உழுத பரந்த நிலத்திடை நீர் கால்வாய் போல ஓடும்படி கண்ணேணியை யுடைய உயர்ந்த மலையின் சிகரந் தோறும்

இழிகின்ற அருவி நீரினும் இனிய சாயலை யுடைய வேள் பாரி யிடம் நீ பாடிச் சென்றால்!"

இங்கு, நெடுவரைக் கோடுதோறு மிழிதரும் அருவி போன்று வரையா தளிப்பவன் பாரி என்று அம்மட்டோடு நில்லாது, அந் நீரினும் இனியன் என 'மாரியில்லாது புவன மில்லை' என விதந்தோதப்பட்ட மாரியினுஞ் சிறந்தது வரையாது இழிதரும் இவன் பறம்பின் தெண்ணீரருவி, அவ் வருவியினும் மிக்கான் இவன் எனப் பொருள் வருவித்தமை கவனத்திற் குரியது. இதே பொருளை மற்றொரு பாட்டாலும் இவர் விளங்கக் கூறுகின்றார் :

"பாரி பாரி யென்றுபல வேத்தி
யொருவற் புகழ்வர் செந்நாப் புலவர்
பாரி யொருவனு மல்லன்
மாரியு முண்டீண் டுலகு — புரப் பதுவே!"
(புறம். ௧0எ.)

"பாரி பாரி என்று சொல்லிப் பலவாறாக அவனது புகழைப் பாடி அவன் ஒருவனையே வாழ்த்துவர் செம்மையான நாவன்மை பொருந்திய நல்லிசைப் புலவர்கள். இவ் வுலகத்தைக் காத்தற்குப் பாரி யொருவனே யல்லன்; மாரியு முண்டு."

இங்கு, மாரியும் இருக்கப் பாரி யொருவனே உலகு காப்பான் என்றாற் போலப் புலவர் அவ் வொருவனையே புகழ்வர் என மாரியினும் மேம்பட்டான் பாரி என்பது பெறப்பட்டது.

"கொடுக்கி லாதானைப் பாரியே யென்று கூறினுங் கொடுப்பாரிலை" என்று பாடிச் சென்ற சுந்தரனார் வாக்கும் இது நோக்கின் மிகை ஆகாது.

இவ் வாறாகப் பாரியைப் பாடி அவனிடம் நட்புரிமை பாராட்டி அவன் அவைக் களத்தே நம் புலவர் பிரான் நெடுநாள் தங்கி யிருந்தனர். தாயை யிழந்து நின்ற பாரி மகளிர்க்கு இவரே காப்பாளர். வெள்ளிய நிலவில் இவர் அவர்களுக்குப் பாட்டியல் படிப்பிப்பார். அவர்களும் இன்னிசை வழங்கி இவரை இன்புறச் செய்வர். மகளிர் இருவரும் தம் முள் மாறுபட்டுக் கவிபாடித் தம் புலமையை நிறுவினும் நிறுவுவர். அப்போழ்து கபிலர் நடுநிலை நின்று அவ்விருவர் பாட்டிலும் உள்ள குண தோடங்களை எடுத்துக் கூறுவர்.

இவர் இங்ஙன மிருக்க, அக்கொடை வள்ளலுக்கு மிக்கதோர் அல்லல் நேர்ந்தது. தாம் விரும்பிய வண்ணம் அவன் தன் மகளிரைக்

கொடாததுபற்றித் தமிழ் நாட்டு மூவேந்தரும் அவனைக் கொல்ல நினைந்து நால்வகைச் சேனைகளோடும் அவன் மலையைச் சூழ்ந்து முற்றுகை யிட்டனர். வெளியிலிருந்து உணவுப் பொருள்கள் வரவொட்டாதபடி தடுத்தனர். ஆனால் பாரியின் பறம்போ இயற்கை வளன்கள் யாவும் பொருந்தியிருந்தமையின் இதற்குச் சிறிதும் இவர்கள் அஞ்சினா ரில்லை. இப்போழ்து கபிலர் மனங்கவரும் பாடல்கள் சில பாடினர்: “மூவேந்தரும் முனைந்து முற்றுகை யிடினும் நீவிர் பறம்பினை அடைய மாட்டீர், அதை யடையும் வழி நான் சொல்வேன் கேண்மின், நீவிர் பாரியின் புகழைப் பாடி வரின் அவன் முன்னர்ப் பரிசிலர்க்கு முந்நூ றூரையும் கொடுத்தாங்கு இவ்வொரு மலையையும் ஈவன்” என்று செருக்குடன் கூறினர். அப்பாடல்களைப் பயில்வார் யாரும் மனமுருகா திரார். அவற்றை ஈண்டு விடுக்கின்றேன்.

“ அளிதோ தானே பாரியது பறம்பே
நளிகொண் முரசின் மூவிரு முற்றினு
முழவ ருழாதன நான்குபய னுடைத்தே
ஒன்றே, சிறியிலை வெதிரி னெல்விளை யும்மே
இரண்டே, தீஞ்சுளைப் பலவின் பலமூழ்க் கும்மே
மூன்றே, கொழுங்கொடி வள்ளிக் கிழங்குவீழ்க் கும்மே
நான்கே, அணிநிற வோரி பாய்தலின் மீதழிந்து
திணிநெடுங் குன்றந் தேன்சொரி யும்மே
வான்க ணற்றவன் மலையே வானத்து
மீன்க ணற்றதன் சுனையே யாங்கு
மரந்தொறும் பிணித்த களிற்றினி ராயினும்
புலந்தொறும் பரப்பிய தேரினி ராயினுந்
தாளிற் கொள்ளலிர் வாளிற் றாரலன்
யானறி குவனது கொள்ளு மாறே
சுகிர்புரி நரம்பின் சீறியாழ் பண்ணி
விரையொலி கூந்தனும் விறலியர் பின்வர
வாடினிர் பாடினிர் செலினே
நாடுங் குன்று மொருங்கீ யும்மே—!”

“இரங்கத் தக்கது பாரியின் பறம்பு! பெருமை பொருந்திய முரசினை யுடைய நீவிர் மூவேந்தரும் முற்றுகையிட்டு நிற்பினும், உழவரால் விளையாதனவாகிய நான்கு விளைபொருள்களை யுடையது அது. அவை, முதலாவது சிற்றிலை மூங்கிலின் நெல் விளையும், இரண்டாவது

இனிய சுளைகளையுடைய பலாப்பழத்தைத் தரும், மூன்றாவது கொழுவிய கொடியை யுடைய வள்ளி தன் கிழங்கினைத் தாழ்ந்து கொடுக்கும், நான்காவது அழகிய நிறங்கொண்ட ஓரி பரந்து தேன்கூ டுடைந்து நெடிய மலையினின்றும் தேன் பொழியும், பரப்பில் வானத்தை யொக்கும் அவன் மலை. வானிடத்துத் தாரகைகளை யொக்கும் அவன் மலையின் சுனைகள். மரந்தோறும் கட்டப்பட்ட யானையை யுடையீராயினும், இடந்தோறும் செலுத்தப்பட்ட தேரை யுடையீராயினும் உம் புயவலியால் அதனைப் பெறமாட்டீர். உம் வாளின் வலிக்கஞ்சி அவன் தாரான். ஆனால் நான் அறிவேன் அதனைக் கொள்ளும் முறைமை. வடித்து முறுக்கிய நரம்பின் சிறிய யாழைப் பண்ணி வாசித்து விரை கமழும் கூந்தலையுடைய நும் விறலியர் பின்வர ஆடியும் பாடியும் சென்றிடின் அவன் உங்களுக்கு நாட்டையும் மலையையும் ஒன்றாகக் கொடுப்பன்.

மேலும்,

“கடந்தடு தானை மூவிருங் கூடி
யுடன்றனி ராயினும் பறம்புகொளற் கரிதே
முந்நூ றூர்த்தே தண்பறம்பு நன்னாடு
முந்நூ றூரும் பரிசிலர் பெற்றனர்
யாமும் பாரியு முளமே
குன்று முண்டுநீர் பாடினிர் செலினே!”

மேற் சென்று கொல்லுந் திறனுள்ள படையோடும் மூவரும் கூடிச் சமரிட்டாலும் பறம்பு கொள்வதற்கு அரியது. முந்நூறு ஊரை யுடையது இந் நல்ல குளிர்ந்த மலைநாடு. அம் முந்நூறூரும் பரிசிலர் பெற்றுச் சென்றனர். நீவிர் பாடிவரின் உங்களுக்கு யாமும் பாரியும் உள்ளேம். மலையும் உண்டு.

அதன்றியும்,

“அளிதோ தானே பேரிருங் குன்றே
வேலின் வேறல் வேந்தர்க்கோ வரிதே
நீலத் திணைமலர் புரையு முண்கட்
கிணைமகட் கெளிதாற் பாடினள் வரினே!”

அந்தோ! அளிது பெருங் கருங் குன்றம். அதை வேல் வலி கொண்டு வெல்லக் கருதும் வேந்தர்க்கு அரிது. ஆனால் நீலத்துத் துணை மலரை யொக்கும் மையுண்ட கண்ணையுடைய கிணைமகளுக்குப் பாடி வரின் அது கொள்ள எளிது.

நெடு நாளாகப் பொருது நின்றும் பாரியைப் போரில் வெல்ல வொண்ணாத மூவேந்தரும் கடைசியில் வஞ்சித்து அவனைக் கொன்றனர். பறம்பும் அவர் வசம் ஆயிற்று. புலவரும், பாரியின் இரு மகளிரும் கையற்றுக் கலங்கிப் புலம்பி நின்றனர்.

(தொடரும்)

R. வாசுதேவசர்மா,

புதுவை.

புகழேந்தி.

(வெண்டாமரை கூ, இதழ் எ, 161-ம் பக்கத் தொடர்ச்சி.)

ஔவையார்.

இவ்வாறு புகழேந்தியும் ஒட்டக்கூத்தனும் ஒரு மனத்துடன் நண்பராய் வாழ்ந்துவருங் காலத்தில், ஓர் நாள் அரசன் இருவரையும் அழைத்துக்கொண்டு உலாவி வரப் போனான். அப்போது இவர்கள் ஓர் வீட்டின் திண்ணையின் மேலே இரண்டு கால்களையும் நீட்டிக் கொண்டு இளைப் பாறிக்கொண்டிருந்த ஓர் வயது சென்ற கிழவியைக் கண்டார்கள். இக் கிழவிதான் ஔவையார். ஔவையார்க்கு ஒட்டக்கூத்தனைக் கண்டால் ஆகவே ஆகாது. அவனது நடக்கை எல்லாம் அவ்வம்மையாருக்குப் பிடிப்பதில்லை. ஆனால் புகழேந்தியையோ உண்மையில் ஒரு புலவர் என்று மதித்து இருந்தனர். அரசன், ஒட்டக்கூத்தன், புகழேந்தியாகிய மூவரும் அவ்வம்மையார் உட்கார்ந்திருந்த வீட்டின் எதிராகப் போனார்கள். அரசன் (கம்பன்?) போவதைக் கண்ட ஔவையார் ஒரு காலை மடக்கிப் பின், புகழேந்தி வருவதைக் கண்டு இரு காலையும் ஒருசேர மடக்கி, ஒட்டக்கூத்தன் வந்ததும் இரண்டு காலையும் நீட்டியருளினார். இதனைக் கண்ட கூத்தனது மனம் எவ்வாறு இருந்திருக்கும்! அதைச் சொல்லவும் வேண்டுமா! கோபமும் வெட்கமும் அதிகரிக்கச் சோழனை நோக்கி,

"இருகாலை நீட்டினளென் றனக் கேகம்ப னென்பவற்கங்
கொருகான் மடக்கிமற் றோர்காலை நீட்டின ளோவியமாய்
அருகாக வந்த புகழேந்தி யைக்கண் டகமகிழ்ந்தே
இருகான் மடக்கினள் காணுன்ற னாரி விலைமகளே."

என்ற பாடலைப் பாடி ஔவையை இகழ்ந்தானாம். இதைக் கேட்ட ஔவையார்,

கற்றதுகைம் மண்ணளவு கல்லா துலகளவென்
றுற்ற கலைமடந்தை யோதுகிறாள் — மெத்த
வெறும்பந் தயங்கூற வேண்டா புலவீர்
எறும்புந்தன் கையாலெண் சாண்.

என்று கூறி, "அரசன் உலக இறைவன் ஆதலால் அவனைக் கண்டு ஒரு காலை மடக்கினேன். புகழேந்தியார் முற்று முணர்ந்து அடங்கிய பெரியோர் ஆதலின் அவர்க்கு இரண்டு காலையும் மடக்கினேன். நீ வெறும் பந்தயங் கூறும் விளையாட்டுப் பிள்ளையாகலின் இரண்டு காலையும் நீட்டினேன். இதில் என்ன குற்றம்! 'அப்படி அல்ல, நான் ஒரு புலவன்' என்பா யானுல், நான் ஒரு வெண்பாவில் மதிப் பெயர் நான்கு வரப் பாடுகிறேன், அவ்வாறு நீ பாடுவதாய் இருந்தால் பாடு, அவ்வாறு முடியாமற் போனுல் உனக் கிஷ்டமான எந்தவகைப் பாவிலாவது கடையடியில் மூன்று மதிப்பெயராவது வரப் பாடு பார்ப்போம்" என்று கூறி, தாம் ஒரு வெண்பாவில் நாலு மதிப் பெயர் வரப் பாடினர்:

"செம்மான் காத்தனருள் சேயா நெடியோனை
அம்மா னெனப்பெற் றருள்வேலா — இம்மான்
கரும்பிறைக்கும் வெண்பிறைக்குங் கண்ணம் பிறைக்கும்
அரும்பிறைக்குங் கூந்த லனை."

ஒட்டக்கூத்தனும்,

"வெள்ளத் தடங்காச் சினைவாளை வேலிக் கமுகின் மீதேறித்
துள்ளி முகிலைக் கிழித்துமழைத் துளியோ டிறங்குஞ் சோணாடா
கள்ளக் குறும்பர் குலமறுத்த கண்டா வண்டர் கோபாலா
பிள்ளை மதிகண் டெம்பேதை பெரிய மதியு மிழந்தாளே"

என்று வெகு அவசரமாக இரண்டு மதியே வரப் பாடி முடித்தான். ஔவை ஒன்று குறைந்தது கண்டு, அவனுக்குப் புத்தி இல்லை என்பது தொனிக்க, சிலேடையாக,

"ஒட்டா ஒருமதி கெட்டாய்"

எனக்கூறி, "புகழேந்தி பெரும் புலவர் என்பதைக் காட்டுகிறேன்" என்று சொல்லி, புகழேந்தியாரைப் பாடச் சொன்னர். அவர் உடனே,

பங்கப் பழனத் துழுமுழவர் பலவின் கனியைப் பறித்ததென்று
சங்கிட் டெறியக் குரங்கிளநீர் தனைக்கொண் டெறியுந் தமிழ்நாடா
கொங்கைக் கமரா பதியளித்த கோவே ராச குலதிலகா [விழியே.
வெங்கட் பிறைக்குங் கரும்பிறைக்கு மெலிந்தப் பிறைக்கும் வேல்

என்று பாடினர். ஔவையாரும் புகழேந்தியை வெகுவாய்ப் புகழ்ந்தனர்.

ஒட்டக் கூத்தன் மனம் வெகுண்டு, எப்படி யாவது ஔவை யாரை அவமானம் செய்ய வேண்டுமென எண்ணி, அவ் வம்மையாரைக் கேள்வி கேட்பது போல 'அடி' என்று சொல்ல விரும்பி,

"ஒருகாலடி நாலிலைப் பந்தலடி"

என்று கூறிய போது, ஔவையார்க்குப் பொறுக்க முடியாத கோபம் வந்துவிட, சிலேடையாக, அவனை 'அடா' என்று அழைத்து "ஆரைப் பந்தல்" என விடையளிக்க, கீழ்க் கண்ட பாடலைப் பாடினர்.

"எட்டேகால் லட்சணமே யெமனே றும்பரியே
மட்டில் பெரியம்மை வாகனமே — முட்டமேற்
கூரையில்லா வீடே குலராமன் றூதுவனே
ஆரையடா சொன்னா யது."

அப்போதும் அவன் செருக்கு அடங்கா திருந்தபோது,

"ஆலைப் பலாவாக்க லாமோ வருஞ்சுணங்கன்
வாலை நிமிர்க்க வசமாமோ — நீலநிறக்
காக்கை தனைப் பேசுவிக்க லாமோ கருணையிலா
மூர்க்கனைச்சீ ராக்கலா மோ."

என்று கூறி, அவன் பாடிய "வெள்ளத் தடங்கா" என்ற பாடலை,

"இலக்கணக் கவிஞர்சொல் லின்பந் தேடுவர்
மலக்குசொற் றேடுவர் வன்க ணாளர்கள்
நிலத்துறுங் கமலத்தை நேரும் வண்டதீ
தலைக்குறை கமலத்தைச் சாருந் தன்மைபோல்."

என்று இழித் துரைத்துப் போயினராம்.

மற்றொரு காலத்தில் ஔவையார், தம் ஐந்து விரலையும் முடக் காமல் நெருக்கி உள்ளங்கையைக் குவித்தும், ஐந்து விரலையும் முடக்கிப் பிடித்தும், கடை விரல் இரண்டையும் முடக்கி மற்ற மூவிரலையும் கோணமாக நிறுத்தியும், நாலு விரல் முடக்கிச் சுட்டு விரலை ஊர்த்துவ முகமாக நிறுத்தியும், ஐந்து விரலையும் குவித்தும் காட்டி, 'இந்த ஐந்து சமிக்கையைக் குறித்து ஒரு வெண்பாப் பாட வேண்டும்' என்று சொன்ன மாத்திரத்தில் ஒட்டக் கூத்தன்,

"இவ்வளவு கண்ணுடையா ளிவ்வளவு சிற்றிடையாள்
இவ்வளவு போன்ற விளமுலையாள் — இவ்வளவு

நைந்த வுடலா ணலமேவு மன்ம தன்றன்
ஐங்துகணை யால்வாடி னுள்"

என்று பாடினுன். இது கேட்டு ஔவையார், "நீ சொல்வது சரியல்ல— புகழேந்தியாரே! நீர் பாடும்" என, அவர்,

"ஐய மிடுமி னறநெறியைக் கைப்பிடிமின்
இவ்வளவே னும்மன்ன மிட்டுண்மின் — தெய்வம்
ஒருவனே என்று முணரவல் லீரேல்
அருவினைக ளோ்ந்து மறும்"

என்று பாட, ஔவையார் சந்தோஷப் பட்டாராம்.

(தொடரும்)

தேன்பட்டினம் - மீனுக்ஷிசுந்தரன்.

திருவாசக ஆராய்ச்சி.

முன்னுரை :—

இந்தியா ஓர் சமயபூமி, அதாவது பல மதங்களுக்கும் தாயகமாய் நிற்பது என்பதே. நமது நாட்டில் தோன்றிய அவ்வளவு சமயங்கள் வேறு எந்த நாட்டிலும் தோன்றியதே கிடையாது. பாரசீகத்தில் ஜோரவாஸ்டரின் மதமொன்றே தோன்றியது. அரேபியாவில் மஹம்மதிய மதமொன்றே உண்டாயிற்று. ஜெருஸலத்தில் கிறீஸ்து மதமும் அதற்குமுன் யூதர் மதமுமே பிரகாசித்தன. மற்றைய மதங்கள் நாகரிகம் அற்ற சாதியாரிடத்தில் அப்போது அப்போது தோன்றி அழிந்தன. நமது இந்தியாவிலே புத்த மதம் என்ன, ஜைன மதம் என்ன, கேவல சுத்த விசிஷ்டாத்வைத முதலிய மதங்கள் என்ன, இன்னும் இவைபோன்ற பல மதங்களும் தோன்றி இன்றும் நின்று நிலவுகின்றன அன்றோ?

பல சமயங்களுக்கும் தாயக மாக விளங்குவது மாத்திரம் இந்தியாவின் சிறப்பியல்பு ஆகாது. பல நம் நாட்டின் நூல்களில் பல மத சம்பந்த மானவைகளாகவே இருக்கின்றன. மத சம்பந்தமான நூல் அல்லாதது ஒன்றில்லை எனலாம். சுகாதார விதிகள் எல்லாம் மத விதிகளே. இவ்வாறே மற்றைய உலக வழக்கம் எல்லாம் மத விதிகளாய் நிற்கவே நம் சாஸ்திரம் எல்லாம் மத நூல்களாகவே விளங்குகின்றன. இந்தியர்கள் நூலைப் படிப்பது எதற்காக என்றால் புருஷார்த்தத்தை

அடையவே என்பர். நன்னூலாரும், "அறம்பொருளின்பம் வீடடைதனூற்பயனே" என்றார். ஆகவே மோட்சத்திற்குச் சாதனமாகாத மற்றைய நூல்களை இந்தியர்கள் படிப்பதற்கு அவாவுவதில்லை.

இத்தகைய குணம் இந்தியர்களுக்குத் தேசத்தினது நிலைமையால் வந்ததாகும். இந்தியா வானது அதிக உஷ்ணமான பூமியாகும். உஷ்ணமான பூமியில் அதிக காலம் வேலை செய்ய முடியாது. ஆகவே சூடான நாட்டில் வசிப்பவர்களுக்கு ஓய்வு காலம் நீண்டிருக்கும். இந்தியாவின் மண்ணானது மிகவும் செழிப் புள்ளதாகும். அதனால் உழவர்க்கு அதிகம் வருத்தம் தராமலே பயனை மிகுதியும் தருகின்றது. இக்காரணத்தாலும் இந்தியர்க்கு ஓய்வு அதிகம் என்னலாம். நமது நாட்டில் அதிக மழை பொழிவதனால் வெள்ளம் அடிக்கடி வந்து பயிர் பச்சைகளை அழித்துப் போவது பெரு வழக்காக இருக்கின்றது. அதனால் உழவர்கள் அதிகக் கஷ்டப்பட்டு வேலை செய்ய மனந் துணிவதில்லை; நன்றாகப் பொருளின் நிலையாமையை உணர்ந்து ஞானப் பேச்சுப் பேசத் தலைப்படுகின்றனர். ஆகவே ஓய்வு காலம் எல்லாம், நான் யார்? என் உள்ளமார்? என்ற ஆராய்ச்சியிலே கழிகின்றது. இக்காரணங்களால் எல்லாம் நமது தேசமானது சமய பூமியாக விளங்குகின்றது.

இந்தியா முழுதும் சமய பூமி என்பதைவிட, தென்னிந்தியா சமய பூமி என்பது ஒரு விதத்தில் பொருத்தமாகும். கேவலாத்வைதத்தை நிலை நிறுத்திய சங்கரரும், விசிஷ்டாத்வைதத்தை விளங்கச் செய்த இராமாநுஜரும், சுத்தாத்வைதத்தை நிலை நாட்டிய நீலகண்டரும் பிறந்து வளர்ந்தது தென்னாட்டில் அல்லவா? அன்பர்களில் சிறந்த பன்னிரு ஆழ்வார்களும் அறுபத்து மூன்று நாயன்மார்களும் கடவுளைத் துதித்துப் பேரானந்த மடைந்தது தமிழ் நாட்டில் அல்லவோ? இந்திய மதம் உண்டானது வட இந்தியாவில் என்றாலும், அது வளர்ந்து செழித்துக் கிளைவிட்டது தென்னிந்தியாவிலேயே ஆகும். இப்போதும் மதத்தால் மதம் பிடித்த பேர்கள் தமிழகத்தில்தான் அதிகம் என்று நான் சொல்வேன்.

மதத்தால் மதம்பிடித்த சிலரைவிடுத்து, அன்பர்வரிசையில் சிறந்து நிற்பவர்களாக இங்கு நம்மால் குறிப்பிடப்படுபவர் நம்மாழ்வாரும், மாணிக்கவாசகருமே யாவர் இவர்கள் மற்றையவர்களுக்குக் காலத்தால் பிற்பட்டவர்கள் ஆனாலும் பெருமையால் முற்பட்டவர்கள் ஆகிறார்கள். இவர்களில் நம்மாழ்வார் விஷ்ணுவை எந்நாளும் போற்றி மோக்ஷமடைந்த பெரியவர் ஆவர். மாணிக்க வாசகரோ சிவனைப் பாடுவதே திருவிளையாட்டாகக் கொண்ட மேலோர். இவர்கள் இருவரது பாடலிலும் மன முருக்கும்

தன்மை சிறந்து விளங்குகின்றது. இன்னும் இவர்களுக்குள் ஒற்றுமை பல இருக்கின்றன என்பதை, திருவாய் மொழியையும் திருவாசகத்தையும் ஒருங்கு வைத்துப் படித்தவர்கள் நன்கு அறிவார்கள். திருவாசகத்தின் பாட்டின் நடை எல்லோரும் போற்றத் தக்க தாகும். அவர்க்கு மேலாகக் கொச்சகக் கலிப்பா பாடுவோர் வேறொருவரும் இல்லை. அதனை எவ்வளவு தூரம் அழகு படுத்த முடியுமோ அவ்வளவு தூரம் அழகு செய்துள்ளார். கம்பர், மீனாக்ஷிசுந்தரம் பிள்ளை, இராமலிங்க ஸ்வாமிகள் முதலானோர் எல்லாம் திருவாசகத்தை மேல் வரிச் சட்டமாக வைத்துக்கொண்டு கலித்துறையில் இறங்கினவர்களே ஆவர். ஆகவே, இவ்வொரு காரணத்தாலேயே திருவாசக ஆராய்ச்சி இன்றியமையாத தென்பது சொல்லாமலே விளங்கும். இன்னும் பல அருமை பெருமைகளும் திருவாசகத்தில் இருக்கின்றன என்றால் முதலில் அந்நூலை ஆராய்ச்சி செய்து பிறகு வேறு வேலை பார்க்கலாம் என்று எல்லாரும் ஒரே மனதாய்ச் சொல்லிவிடுவார்கள். ஆதலின் அதையே பொழுது போக்காகக் கொண்டு தெரிந்தவரை எழுதி வியாசத்தை முடிப்போம்.

(வரும்.)

தென்பட்டினம் — மீனாக்ஷிசுந்தரன்.

செல்வம்.

இப்பூவுலகில் மனிதர்களுக்குப் பலவகை யின்பங்களை யடைவதற்கேதுவாய் நின்று உதவி புரிவது செல்வமாம். அச்செல்வம் உலகில் இருவகைப் படும். ஒன்று **பொருட்** செல்வ மென்றும், மற்றொன்று கல்விச் செல்வ மென்றும் பெயர்பெறும். பொருட் செல்வம் தன்னைப் பெற்றார்க்கு, "பொருளுடையான் கண்ணதே போகம்" என்றபடி, இம்மையில் பல வகை யின்பங்களையும், அதற்கேற்ற சாதனங்களையும் அளிக்க வல்லதாம். இதைக் குறித்தே "பொருளில்லார்க் கிவ்வுலக மில்லை" யென்றார் பெரியோர். ஆயினும் இச் செல்வத்தை விடக் கல்விச் செல்வமே விழுமிய தென்று கூறத்தகும். எங்ஙனே யெனில், "அறம் பொருள் இன்பமும் வீடும் பயக்கும் கல்வி" என்றபடி, கல்வியானது முற்கூறிய பொருளையுங் கூட்டி மற்றைய அறம் இன்பம் வீடு என்னும் முப் பேறுகளையும் பயக்கும் வன்மை யுடைமையினென்க. இதுபோல் பொருட் செல்வம் கல்விச் செல்வத்தை யடையச் செய்யா

தென்பதைக் கவனிக்க. இவ்விடத்தில் சிலர் பொருளைக் கொண்டு கல்வியைச் சம்பாதித்தல் கூடுமென்று கூறுதல் கூடும். அங்ஙனமாயின் அவரது கொள்கையின்படி பொருளைச் செலவிட்டு ஒரு பண்டம் வாங்குவதுபோல், கல்வியை வாங்கிப் பாண்டித்திய மடையக் கூடுமோ? அவ்விதம் வாங்க முடியாதென்பதும் பொருளைச் செலவிட்டு வருந்திக் கற்றுலன்றிக் கல்வியைக் கைப்பற்ற இயலாதென்பதும் நன்கு பெறப்படுவதால், பொருட் செல்வத்தால் கல்விச் செல்வத்தை யடைதல் கூடாமை யென்பது உண்மை. பின்னும் பொருட் செல்வமானது பிறரால் அபகரிக்கக் கூடியதாயும் விரைவில் அழிந்து போகக் கூடியதாயும் நிலையற்ற தன்மைத்தாயும் பலவித அபாயங்களுக் குட்பட்டதாயுமிருக்கிறது. கல்விச் செல்வமோவெனில், பிறரால் அபகரிக்க முடியாததாயும் அழிவற்றதாயும் மேன்மேலும் விருத்தி யடையும் மாட்சிமையுடைத்தாய்ப் பலவித சிறப்புகளுக் கிருப்பிடமாயுமிருக்கிறது. மேலும் பொருள் எடுக்க எடுக்கக் குறைவுறும், கல்வி சொல்லச் சொல்ல நிறைவுறும். பொருள் பலவித அபாயங்களை யுண்டாக்கும், கல்வி யவ்வபாயங்களினின்றுந் தப்புவதற் குபாயத்தைப் புகட்டும். பொருள் பகையை யுண்டாக்கும், கல்வி அப் பகையை நீக்கி நட்பை யுண்டாக்கும். பொருளைச் செலவிடாது வைத்திருப்பினும் நாளுக்கு நாள் உருமாயும், கல்வி நாளுக்கு நாள் மனனஞ் செய்ய உருவேயும். பொருள் மிகுந்தால் பூமியிற் புதைக்கப் படும் வேறு வழிகளிலும் தனக்குப் பயனின்றிப் பிறர்பாலடையும், கல்வி மிகுந்தால் மனத்திற் பதிக்கப் படும் வேறு வழிகளிலும் தனக்கும் பிறருக்கும் பயன் படும். பொருள் கள்வராலும் தாயாதிகளாலும் அக்கினியினுலும் அரசனுலும் பின்னும் பலராலும் பாகித்துக் கொள்ளப் பட்டழியும், கல்வியோவெனில் எவராலும் எக்காலத்தும் கொள்ளையிடக் குறைவுறாது நிறைவுறும். பொருள் இவ்வுலகத்தே யழிவுறும், கல்வி யங்ஙன மழிவுறாது தன்னை யடைந்தவர்க் கிம்மையில் பலவகைப் பயன்களையு மளித்து மறுமையிலும் நற்கதியிற் புகுத்துவிக்கும். இவ்விதம் பல் வகைத்து முற்று நோக்கின் கல்வியின் சிறப்புக் காதலப்பண்டு போலாம். இதை நோக்கியே ஆன்றோர்,

"வெள்ளத்தாலழியாது வெந்தணலால் வேகாது வேந்தராலும்
கொள்ளத்தான் முடியாது கொடுத்தாலு நிறையுமன்றிக் குறைவுறாது
கள்ளர்க்கோ மிகவரிது காவலோ மிகவெளிது கல்வி யென்னும்
உள்ளத்தே பொருளிருக்க வூர்தோறும் பொருள்தேடி யுலைவதென்னே."

என்று அருளியிருக்கின்றனர். ஒருவன் அறமுதலாயவற்றை யடைய வேண்டின் முதலில் பொருளைப் பெறல் ஆவசியக மென்பது ஒப்புக்

கொள்ளத் தக்கதே. பொருளைப் பெற்றால் அறமியற்றுவதற்கும் அதன் வழியாக வீடடைதலுக்கும் சாதக மாகிறது. உலகில் தருமங்கள் பலவும் பொருளின் மூலமாகவே யியற்றப் படுகிறதென்பது யாவருக்கும் நன்கு புலப்படும். அதனால் இன்பத்தை நுகர்வதற்கும், அறத்தை யியற்றி மேன்மை யுறுவதற்கும் பொருள் முக்கிய மெனப்படுகிறது. அவ்விதமாயினும், கல்வியின்றேல், பொருளைப் பெற்றோர் மேற்கூறிப் போந்த பயனனைத்து மடைவதற்கில்லை யென்பது நிச்சயம். எவ்வித மெனில்,

"அறனீனு மின்பமு மீனுந் திறனறிந்து தீதின்றி வந்த பொருள்"

என்னும் நந் தமிழ் மறை மொழியானும், நம்மனுபவத்தானும், குற்ற மற்ற நல்வழியி லீட்டிய பொருளே அறமுதலாய பயன்களை யளிக்க வல்ல தென்பது பெறப்படுகிறது. அனுபவத்தா னென்றதற் கொரு நிதர்சனங் கூறுதும்.

(தொடரும்)

என். வெங்கடரமணன்.

தற்காலத்து வீரர்கள்.

இப்போது ஐந்தாண்டுகளாக உலகமெங்குங் குழப்பமுற நடந்தேறிவரும் இக்கடும் போரில் நிகழும் அநேக தீரவீரச் செயல்களின் விவரங்களைத் தினசரி வர்த்தமானப் பத்திரிகைகளில் அப்போதைக் கப்போது கண்ணுற்று வருகிறோம். வீரச்செயல் புரிபவர்களுள், ஆண் மக்களென்ன! பெண் மக்களென்ன! எத்தனையோ எண்ணிறந்த ஜீவர்கள், தங்கள் தங்கள் சிநேகிதர் பொருட்டோ அல்லது தேசத்தின் நிமித்தமோ அல்லது தங்கள் கோரிக்கையை நிறைவேற்றுவதற்காகவோ, பொறுமையுடன் வருந்தி, கீர்த்தியையும் புகழையும் கருதாமல் தங்கள் ஆவியை இழந்து வருகிறார்கள். இவர்களுள் சிலர் தங்கள் உயிரை இழப்பது, மனிதனொருவனுக்கும் அறிய இடமில்லை யென்றால், அஃது எத்தன்மையானது என்று ஊகிக்க வேண்டுமன்றோ?

வீர சூரர்களில் சிலர் ஆகாய கமனஞ் செய்கிறார்கள். இவர்கள் எச்சமய மேனும் நிலத்தின் மீது வீழ்ந்திறப்பது திண்ணமே. சிலரோ சமுத்திரத்தின் ஆழத்தில் அமிழ்ந்து மறுபடியும் மேலே கிளம்பி வருவோம் என்னும் நிச்சய மின்றிச் செல்லுகிறார்கள். வேறு சிலர் அரண்களின் புறத்திலேறி இறக்கின்றார்கள். ஏனையோர்,—இவர்களுள் பெரும்

பான்மையர் பெண்மணிகளே,—காயம்பட்ட வீரர்களின் பக்கத்திலிருந்து எத்தகைய ஆபத்துக்களையும் பொருட் படுத்தாமல் அவர்களுக்குச் சிகிச்சை செய்து வருகிறார்கள். இது போலவே இன்னும் எத்தனையோ வீரசூரர்களு மிருக்கின்றார்கள்.

நிற்க, அரண் வெட்டுபவரின் நிலைமையைப் பற்றிச் சிறிது நோக்குவோம்.

ஒரு கோட்டையின் சமீபத்திலாவது அல்லது வேறொரு அரணின் சமீபத்திலாவது நெருங்கிக் கொண்டிருக்கும் ஒரு சேனை, சத்துருவின் பந்தோபஸ்துக்களனைத்தையும் அழிக்க முயலும். இச் சமயத்தில்தான் அரண் வெட்டிகளின் உதவி வேண்டும். இவர்கள் அரண்களை ஒழுங்காய் வெட்டாமல் கோணல் வடிவமையத் தோண்டுவார்கள். பின்னர் அவைகளில் காலாட்படை செல்லும். இப்படி வெட்டுகிறதற்கு முதலில் ஒருவன் நெருங்கிய அரணொன்றைத் தோண்டுவான். அவனுக்குப் பின் சில அடித் தூரத்தில் மற்றொருவன் காணப் படுவான். இவன் அவ்வரணைப் பெரிதாக்குவான். இவன் பின் மற்றொருவனையுங் காணலாம். இங்ஙனமே ஒருவன் பின் ஒருவன் முதலில் தோண்டிய அரணைப் பெரிதாக்கிக் கொண்டே செல்லுவார்கள். இவ்வேலை செய்து முடிப்பவர்களது நிலைமை மிக ஆபாயகரமானது. இவர்கள் வீரம் பெரிது. முதலில் நிற்பவன் உயிர் சாதாரணமாய் ௨0 நிமிஷங்கள் கூட நீடிப்பதில்லை யென்றால் அவர்கள் செய்யுங் காரியம் எவ்வளவு வீரத் தன்மை பொருந்தியதென்று சொல்ல வேண்டும்! ஒருவன் உயிர் துறக்க நேரிடுமென்று தெரிந்தாலும் அவன் வேலை நிறுத்துவதில்லை. புறங் காட்டி யோடுவது மில்லை. அவனுக்குக் கெடுதி நேரிட்டால், அவன் பின்னிருக்கும் மற்றொருவன் உடனே அவனிடத்தை வகித்து வேலையைத் தொடர்ந்து செல்லுவான். பறவைகள் வேட்டை யாடுபவர்களால் மண்டையி லடியுண்டு இறக்குமாறு போல உயிர் துறக்கும் இவ்வீரர்கள் விடா முயற்சியோடு சத்துருவை நெருங்கி அவ்விடத்தில் சுரங்கம் வெட்டி அதன் இறுதியில் வெடி மருந்துகளை வைத்துவிட்டு அதனின்றும் அப்பாற் சென்று மின் சாரத்தின் உதவியால் தீப் பற்றும்படி செய்வார்கள். இது போலவே சத்துருக்களும் அரண்கள் வெட்டிச் சுரங்கந் தோண்டுவார்கள். இச்சுரங்கங்களின் கடைசிப் பாகத்தில் காவலாட்கள் சத்துருவின் செயல்களை யெல்லாம் காதினாலோ அல்லது மின்சாரக் கருவிகள் வாயிலாலோ உற்றுக் கேட்டுக் கொண் டிருப்பார்கள். சுரங்கந் தோண்டிக் கொண்டு போகும் மனிதன், எதிரியின்

காவலாட்கள், தான் வேலை செய்யும் சப்தத்தை அறிந்துவிட்டால் எந்த நேரத்தில் உயிரோடோ அல்லது உயிர் துறந்தோ தான் மண்ணால் மூடப் படுவானென்பது அவனுக்குத் தெரியாது. சில சமயங்களில் இரண்டு சேனையிலும் சுரங்கந் தோண்டுபவர்கள் தெரியாமலே ஒரே வழியாய்ச் செல்லுவது முண்டு. அப்போது ஒருவருக் கொருவர் சந்தித்து மல்யுத் தஞ் செய்து, மண்வெட்டிகளால் துண்டிக்கப் படுவார்கள்.

இத்தகைய வீரர்களின் செயல்களைக் கேட்டறிந்த நாம் நம கடமைகளை எவ்வாறு முடித்தல்வேண்டும்? நாம் ஒன்றைச் செய்ய முயலுஞ் சமயத்தில் எண்ணிறந்த இடையூறுகள் உண்டாகலாம். அவை களினின்று மீள எத்தனித்தும் பயன்படாமலும் போகலாம். அதனால் மனந் தளர்ந்து எடுத்த காரியத்தைக் கைவிடுதல் கூடாது. எதற்கும் சலிக்காமல் ஒரே மனதாய்க் கோரிக்கையைப் பூர்த்தி செய்தல் வேண் டும். முக்கியமாய் அரண் வெட்டிகளின் தீரச் செயல்கள் எப்படி இரு ளில் மறைந்திருந்தும், ஒருவருக் குந் தெரியாமலிருந்தும், ஒரு சேனை முழுவதும் அவற்றால் காப்பாற்றப் படுகின்றனவோ அப்படியே நாம் செய்யுங் காரியங்களும் புகழ்ச்சியை விரும்பாமலும், பிரதிபயனைக் கரு தாமலும் பிறர்க்குப் பயன்படத் தக்கனவாய் இருத்தல் வேண்டும்.

R. A. பொன்னுசாமி,
புதுவை.

பத்திரிகை வரவு.

ஸ்ரீலோகமாதா:—இது புனலூரில் மாதந்தோறும் வெளியாகும் ஒரு தமிழ்ப்பத்திரிகை. இதில் பயன்தரக்கூடிய பலவியாசங்கள் காணப் படுகின்றன. பல நல்ல விடயங்களை மக்கட்கு இனிமையாகப் புகட்டுவ தினாலே லோகமாதா என்னும் பெயர் இதற்குப் பொருத்தமுடையய தாகும். இதன் ஆசிரியர், பண்டிதர் M. M. நாராயணசாமி ஐயரவர்கள்.

இதன் வருடச்சந்தா ரூபா 1—8—0. கிடைக்குமிடம்: மானே ஜர், ஸ்ரீ லோகமாதா ஆபீஸ், புனலூர் (திருவாங்கூர்)

ஞானோதயம்:—இது தூத்துக்குடியில் மாதந்தோறும் வெளியா கும் ஒரு தமிழ்ப்பத்திரிகை. இதன் பெயர்க்கேற்றபடி ஞானத்திற்குரிய அரிய பெரிய விடயங்களும், பிறவிடயங்களும் இதில் பொறிக்கப் பட் டுள்ளன.

இதன் வருடச்சந்தா ரூபா 2. கிடைக்குமிடம்: சிவ. பெ. இராம லிங்கநாடார், ஞானோதயம் ஆபீஸ், தூத்துக்குடி.

இவற்றை நமக்கனுப்பியவர்க்கு நமது நன்றியை யனுப்புகின்றோம்.

ப—ர்: